# காந்தீயம்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Publication of All Ceylon Gandhi Seva Sangam

Rg.No.S.159 of 25-8-1965

மலர் – 25 இதழ் – 01 ஒக்டோபர் – நவம்பர் – 2009 விலை ரூபா 10/-




## சத்தியம் அகிம்சை அன்பு

என்பு தோல் போர்த்த உடலுடன்
இத்தகு மானுடன் ஒருவன்
இத்தரைமிசை நடந்தான் என
நம் பின் வருவோர் நம்புதல் அரிதே.

- ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

## மகாத்மா காந்தியின் சிந்தனைகள் மீண்டும் புத்துயிர் பெறுகின்றன

- சுவாமி சித்ருபானந்தா

மகாத்மா காந்தியைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது சத்தியமான வாழ்க்கை, எளிமை, பிறருக்கு துன்பம் செய்யாமை, கடவுளிடம் பிரார்த்தனை இவையாவும் நமக்கு தோன்றும். இன்றைய உலகில் மகாத்மா காந்தியின் சிந்தனைகள் மீண்டும் புத்துயிர் பெறுகின்றன. அரசியல் லாபத்துக்கென எவரும் எதையும் செய்கின்றனர். காந்தி மக்களின் நலனுக்காக தன்னை முற்றாக அர்ப்பணித்தார். தனது வாழ்வு மூலம் எளிமையை என்றும் கடைப்பிடித்தார். தோடம்பழச்சாறு கூட அவர் என்றும் அருந்திய தில்லை. நாட்டுப்பற்று உடையவராகத் திகழ்ந்தார். இதனைத் தமது வாழ்வில் நிதர்சனமாக அனுஷ்டித்தார். இன்று எவரும் மேடைப் பேச்சாளராகத் திகழுகின்றனர். அனுஷ்டானம் சிறிதேனும் கிடையாது.

ஒரு வித்தியாலயம் கோயம்புத்தூரில் உண்டு. இதற்கு அடிக்கல்நாட்டி அவர் கூறியதாவது "இவ்வித்தியாலய மாணவர்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவராகவும் தெய்வ நம்பிக்கை உடையவராகவும் திகழவேண்டும்" என்றார். இவ்வித்தியாலயத்தில் அடியேன் 3 வருடங்கள் பணிபுரிய வாய்ப்பு கிடைத்தது. தமிழ் நாட்டில் இன்று 300 ஏக்கரில் 14 கல்வி ஸ்தாபங்கள் இவ்வித்தியாலயத்தில் உண்டு. ஆகவே உன்னத மகாத்மா என்று அழைக்கப்படும் காந்தி நமக்கு ஒரு வழிகாட்டியாக இருப்பாராக.

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாசிரமம்,
பருத்தித்துறை.

## காந்தீயப் போராட்டம்

(பாரதியின் நெஞ்சில் உரமுமின்றி எ.மெ)

அகிம்சை தின சிறப்புக் கவிதை

1. 'போராட்டம் வாழ்க்கை என்றால்
போகும் வரை இப்பூவில்
போராட்டம் செய்வோமடா! - மகனே,
பொழுதைக் கழிப்போமடா!

2. போர் எனில் குண்டும் அல்ல,
போடும் வான் ஊர்தி அல்ல,
ஊர் அழிவாவதல்ல - மகனே,
உண்மைப் போர் ஆட்டமடா!

3. காந்தி எனும் மகாத்மா
கண்டு பிடித்துத் தந்த
சாந்திப் போர் ஆட்டமடா - மகனே,
சமாதான மான தடா!

4. 'காந்திய'ப் போர் இருக்க,
கண்ட கருவி யெல்லாம்
ஏந்திப்போர் ஆடுவதோ? - மகனே,
எமனை அழைப்பதுவோ?

5. மண்டேலா போன்றார் என்ன,
மாட்டின்லூதர்கிங் என்ன,
கண்ட விநோபா என்ன - மகனே,
காந்தீயப் போராட்டமே!

6. உற்றநோய் நோன்றல் - மற்றும்
உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே (261) காந்தீயம் என்றார் - குறளார்
அதனை மறவோமடா!

7. புத்தர் - இயேசு - நபி
போராட வில்லை யாமோ?
சித்தத்தில் தோற்றாராமோ? - மகனே,
சீர்கேடடைந்தாராமோ?

8. செல்வாவை கந்தை யாவை -(காந்தி ஐயா -திருமலை)
சிறிதும் மறந்திடாமல்
வெல்லும் வழி தொடர்வோம் - மகனே,
வீரம் நெஞ்சுரமே யடா!

'தாமரைத் தீவான்'



## 140 ஆவது ஜெயந்தி

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில் அக்டோபர் மாதம் 02ம் திகதி மகாத்மா காந்தி அடிகளாரின் ஜெயந்தி தினம் அனுஷ்டிக்கப் படவுள்ளது. இதனை முன்னிட்டு 2009.09.28 ஆந் திகதி தொடக்கம் 2009.10.02 வரையான ஐந்து தினங்களை சங்கம் அஹிம்சை வாரமாக அறிவித்துள்ளது. யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மாத்தளை, கொழும்பு ஆகிய இடங்களில் ஜெயந்தி தினத்தை சிறப்பான முறையில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை அந்தந்த மாவட்டங்களுக்குப் பொறுப்பான சங்க நிர்வாகிகள் மேற்கொண்டு வருகின்றனர். மர நடுகை, கூட்டு வழிபாடு, சிரமதானம், அஹிம்சை அறிவூட்டல் கருத்தரங்கு, மது ஒழிப்பு, உண்ணாநோன்பு போன்ற நிகழ்வுகள் அஹிம்சை வாரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வுகளிலும் இறுதி நாள் நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு காந்திய அன்பர்களையும், சங்கத்தின் உறுப்பினர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

# அண்ணல் காந்தியின் முதல்விரதம் – சத்தியம்

நான் என்றேன் தனிப்பொருள் தரணியில் இல்லை
நான் என்பதே வெறும் பொய் என்றார் பாரதி
நாம் ஒருபெரும் பொய்எனக் கொண்டு புவியினில்
நாம் மெய்யை சத்தியத்தை அறிந்திட முயல்வோம். 1

படைக்கப்பட்டவை அனைத்தும் அழிபவை
படைக்கப்பட்ட உருவம் பெற்ற
படைப்புக்கள் அனைத்தும் மறைபவை என்று
பட்டறிவு உணர்த்துவதை நாம்மிக அறிவோம். 2

இறைவன் என்பவன் யார் அவன் எங்குளான்
மறைவாக உள்ளான் எங்கும் உள்ளான்
பாரின் படைப்புக்கள் அனைத்திலும் உள்ளான்
பாரில் உழலும் உயிர்களிலும் இருப்பான். 3

மண்ணில் திகழும் உயிர்கள் எத்தனை
வண்ணப் பூச்சிகள் பறப்பவை எத்தனை
மண்ணில் திரியும் விலங்குகள் எத்தனை
மண்ணில் வாழும் உயிர்கள் எத்தனை 4

கோள்களைச் சுழற்றும் ஆற்றல் எதுவோ
கோள்களுக்கு வெப்பம் எப்படி வந்தது
கோள்களின் விசையை இயக்குவது எவனோ
கோள்கள் கட்டளைகளை எவரிடம் பெற்றது. 5

ஒளியில் எல்லா நலமும் உள்ளது
ஒளிநல் அறிவை உயிர்களுக்கு நல்கும்
ஒளியே அறிவைப்பெருக்கும் பெருஞ்சக்தி
ஒளியைக் கண்டு உயிர்கள் மகிழும். 6

புவிக்குள் காற்று எப்படி வந்தது
புவிக்குக் காற்று எவர்வழி கிடைத்தது
புவியின் காற்றே உயிரின் ஆற்றல்
புவிமிசை காற்றால் உயிர்மிக வாழும் 7

புவிநீர்ப் பிடிப்பு எங்ஙனம் வந்தது
புவிநீர்த் தன்மை எப்படிச் சேர்ந்தது
புவிநீர் இன்றி அமையா உலகு என
புவியில் வள்ளுவர் முன்புதனை பகர்ந்தார் 8

ஐம்புலன் ஐந்தென அறிஞர் மொழிவர்
ஐம்புலன் அனைத்தும் உடம்பினுள் செயல்படும்
ஐம்புலன் மெய்வாய் கண்காது மூக்கென
ஐந்தொழில் வல்லுனர் முன்னரே பகர்ந்துனர். 9

உலகம் பஞ்சபூதத்தில் ஆனது என்பர்
உலக உயிர்களை ஆய்ந்தால் அனைத்தும்
வளமுடன் பஞ்ச பூதத்தில் இருந்தே
நலமுடன் தோன்றின என்பதை அறிவோம். 10

இ.தவகோபால்
- யாழ்ப்பாணம் -

## மகாத்மா காந்தியடிகளின் கருத்துரைகள்



1. மிதமாகப் பேசு.
2. எவர் எது சொன்னாலும் கேட்டுக்கொள், உனக்குச் சரியென்று தோன்றுவதைச் செய்.
3. ஒவ்வொரு நிமிடத்தையும் முக்கியமாகக் கருதிக் குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செய்.
4. ஏழைபோல் வாழ், செல்வத்தில் பெருமை கொள்ளாதே.
5. நீ செய்யும் செலவிற்குக் கணக்கெழுது.
6. மனம் ஒன்றிக் கல்வி கற்றுக்கொள்.
7. நாள்தோறும் உடற்பயிற்சி செய்.
8. அளவோடு சாப்பிடு.
9. நாள் தவறாமல் நாட்குறிப்பெழுது.

மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்.

பசிப்பிணியை அகற்றிடவே
பசுமைப்புரட்சி செய்திடுவோம்.

## படிப்பினை

வருகின்ற யாவர்க்கும் எளியனாக
காந்தியைப் போல் வரவேற்கும் வழக்கம் வேண்டும்
தருகின்ற சந்தேகம் எதுவானாலும்
காந்தியைப் போல் தணிவாக தர்க்கம் செய்து
திரிகின்ற மயக்கத்தை தீர்த்து வைத்து
திட மறிந்த வழிகாட்டும் தெளிவு வேண்டும்
புரிகின்ற புத்திமதி எது சொன்னாலும்
புண்ணின்றி காந்தியைப் போல் புகட்ட வேண்டும். (தொடரும்)

(நாமக்கல் கவிஞர் அவர்களின் "காந்தி அஞ்சல்" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றது)

# காந்தீயம்

காந்தி ஆண்டு 141, ஒக்டோபர் - நவம்பர் - 2009


## விழித்தெழுவோம்

மகாத்மா காந்தி அடிகளின் 140 ஆவது ஜெயந்தி தினத்தை கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையிலே அவர் கண்ட சர்வோதய சமுதாயம் பற்றி எமது பார்வையைச் செலுத்துகின்றோம். எல்லோருடைய நன்மையையும் எல்லோருடைய மேன்மையையும் அடையக்கூடிய லட்சியத்தை வாழ்க்கைக் கொள்கையை மகாத்மா காந்தி 'சர்வோதயம்' என்று அழைத்தார். மக்கள் அனைவரும் தமது வாழ்வில் மலர்ச்சி பெறவேண்டும். என்று அவர் விரும்பினார். குறிப்பாக கிராம மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு அவர் பெரும் முயற்சி செய்தார். அவரின் பிரதான வேலைத்திட்டங்கள் கிராமங்களை அடிப்படையாக வைத்தே செயற்படுத்தப் பட்டன. விவசாயம், கால்நடை வளர்ப்பு, கைத்தொழில்கள் மூலமாக சுயபொருளாதாரத்தில் ஒவ்வொருவரும் நிலை உயரும் போது சமுதாயம் முன்னேற்றம் காணும் என்பது வெளிப்படையானதே.

கிராமங்கள் நாட்டின் இதயம் போன்றவை. கிராமங்களிலேயே நாட்டின் வளங்கள் குவிந்துகிடக்கின்றன. நாட்டின் புத்திஜீவிகளும் கிராமங்களிலிருந்தே உருவாகு கின்றனர். இன்றைய நிலையில் பல்வேறு தேவைகளின் நிமித்தம் மக்கள் நகரங்களை நோக்கி குடிபெயர வேண்டிய அல்லது இடம்பெயர வேண்டிய தேவை எழுகின்றது. இதனால் நகரங்களில் குடித்தொகைப் பெருக்கமும் அதனால் ஏற்படுகின்ற விளைவுகளும் மனித வாழ்க்கைக்கு ஒவ்வாத சூழலை அங்கு ஏற்படுத்துகின்றன. எனவே கிராமங்களில் அபிவிருத்தியை ஏற்படுத்தி அவற்றைப் பிரகாசிக்க வைப்பதற்கு ஏற்ற திட்டங்கள் தேவை. இதற்கு கிராமப்புற மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படவேண்டியது அவசிய மாகின்றது. அபிவிருத்திக்கான கோரிக்கை மக்களிடமிருந்து கிடைக்கப்பெறவேண்டும். இதனால் அரசாங்கங்களின் பார்வை கிராமங்களை நோக்கித்திருப்ப வேண்டிய தவிர்க்கமுடியாத சூழ்நிலை உருவாகும். வாழ்க்கைக்கு உகந்த இயற்கையான கிராமியச் சூழலில் அபிவிருத்திப் பணிகள் முனைப்புப் பெறும். அதன் மூலமாக மக்கள் வாழ்வு வளம் பெறும். இதுவே காந்தி அடிகளின் விருப்பமுமாகும்.

இவற்றுக்கு அடிப்படையான விடயம் மக்கள் விழிப்படைவதேயாகும். இன்று மக்கள் விழிப்புப் பெற வேண்டிய காலகட்டம் வந்துள்ளது. மக்களின் குடிபெயர்வைச் சாதமாகப் பயன்படுத்தி அவர்களின் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. அந்நிய சுவீகரிக்கப்பட்டு பாரிய தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன. இதன் மூலமாக இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதோடு சூழலும் பாதிப்பை எதிர்கொள்கின்றது.

மக்களின் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்வோர் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் அக்கறை காட்டுவதில்லை. தேர்தல் காலங்களில் மட்டும் கிராமங்களில் வலம் வருகின்றனர். வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர். அதற்கான திட்டங்கள் எதுவும் இவர்களிடம் காணப்படுவதில்லை. வெற்று மேடைப் பேச்சுகளாகவே அவை இருக்க மக்களையும் தம் பால் கவர்ந்து விடுகின்றனர். இந்த ஏமாற்றுக் கூட்டங்களிலிருந்து மக்கள் விழித்தெழவேண்டும். எமது வாழ்வு எமது கைகளிலேயே தங்கியுள்ளது என்ற உண்மையை உணர்ந்து சமூக உணர்வோடு பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டங்களில் இணைய வேண்டும். தமக்கிடையே சுயாதீன குழுக்களை உருவாக்க வேண்டும். அதன் மூலமாக தலைவர்கள் உருவாக்கப்பட வேண்டும். இதுவே இன்றைய நிலையில் விடுதலைக்கானதும் மாற்றமொன்றுக்கானதுமான மார்க்கமாகும்.

காந்தி அடிகளின் தேசப்பற்று எம் அனைவர் மனங்களிலும் விதையாக ஊன்றப்படவேண்டும். ஒவ்வொரு கிராமங்களிலும் தேசப்பற்றுடைய தலைவர்கள் உருவாக வேண்டும். அடிகளின் கிராமிய சிந்தனைகள் இதன் மூலமாக பரவலடைய வேண்டும். இதன் மூலமே அனைத்து முன்னேற்றங்களும் சாத்தியமாகும் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

- ஷாந்தன் சத்தியகீர்த்தி -

## உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்தவர் மில்க்வைற் கனகராசா

உலக தொழில் மயமாக்கல் என்ற நிலையில் இலங்கையில் தொழில்துறை விரிவாக்கத்தில் மில்க்வைற் கனகராசா அவர்கள் ஓர் சாதனையாளர்.

உள்ளூர் உற்பத்திகளையும் தொழிற் பயிற்சிகளையும் இலகுபடுத்தியதன் மூலம் பல்துறைகளிலும் மக்களுக்கு பயிற்சியளித்தார். இவரது மில்க்வைற் செய்தி இதழ் காலத்திற்கு காலம் பன்மொழிப்புலவரின் சிந்தனை இதழாகவும் மக்கள் பயன் பெறும் செய்திகளை தந்தமையினால் கலாநிதிப் பட்டம் அமெரிக்க பல்கலைக்கழகத்தினால் வழங்கி கௌரவிக்கப்பட்டமை ஓர் சிறப்பாகும்.

மாணவர்களது மனதில் உகந்த போதனையாக 'திருக்குறள்' செய்தி அமைந்தது. பனம் பொருள் உற்பத்தி ஊக்குவிப்புகள், பனம் விதைகளை சென்ற இடங்கள் எல்லாம் வழங்கியதுடன் விதைகளைச் சேகரித்து மரம் நடுகைகளையும் ஊக்கமளித்தார்.

இலங்கை இந்து இளைஞர் பேரவையின் வளர்ச்சிக்கும், இந்து சமயப் பேரவையின் தோற்றத்திற்கும் முன்னின்று ஊக்கமளித்தார். சுவாமி தனிநாயக அடிகளாரது படத்தை வெளிப்படுத்தி நூணாவில் சனசமூக நிலையம் நடாத்திய போட்டியில் பரிசு வழங்கியது முதல் 1980ம் ஆண்டு முதல் அவருடன் கொண்ட எனது தொடர்புகள் ஓர் சாதனையாகும்.

சர்வதேச ரீதியாக சமய, மொழிவளர்ச்சிக்கு காந்தியத்தை நெறிப்படுத்தி வந்தவராகும். காந்தீயக் கொள்கையை முதன்மைப்படுத்தும் வகையில் அமரர் வாழ்ந்து காட்டிய பணிகள் பல மக்கள் மத்தியில் நிலைபெற இவரால் வழங்கப்பட்ட நூல்கள், மீள் பதிப்புகள் காலத்தின் தேவையறிந்து வழங்கியமையும், பிரசுரங்களும் ஓர் சாதனையாகும்.

இவற்றின் பிரதிகளை ஓர் காட்சிப்படுத்தும் நிலையை வருடா வருடம் நினைவு கூருதல் அவசியமாகும். 1977ம் ஆண்டின் பின்னர் தொழில் வளர்ச்சிகள் அதிகம் பாதிப்புற்றாலும் தொடர்ந்து தொழில் விரிவாக்கத்தில் ஊக்கப்படுத்தியதன் மூலம் பலர் தொழில் விரிவாக்கம் பெற வழிவகுத்தார்.

எனவே இவரது பணிகள் மீளவும் வளம்பெற மில்க்வைற் நிறுவனம் தொடர்ந்து சிறப்புற அதன் உரிமையாளர்கள் பணிபுரிதல் சிறப்பாக அமைய பிரார்த்திப்போமாக.


**வே.கெ. தனபாலன்** *B.A.Dip In Edu*
இந்து இளைஞர் பேரவை யாழ் மாவட்டம்
தலைவர்
இந்து அரச ஊழியர்கள் இணையம்
இலங்கை.


## சர்வதேச பசுபாதுகாப்புக் கழகம் - இலங்கை

பசு இன பொருளாதாரம் இந்து சமயிகளாலும், பௌத்த சமயிகளாலும் இரண்டாயிரம் ஆண்டுகளாக பேணப்படுகின்றன.

ஒல்லாந்தர்களது பசு இன அழிப்புக்கொள்கை இலங்கையில் வெற்றிபெற வில்லை. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாச முனிவரதும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விபுலாநந்தர் பௌத்த சமய குருமார்களதும் பிரசுரங்கள் தென்னாசிய நாடுகளில் சிறப்பு பெற்று வருகின்றன.

இலங்கை இந்து இளைஞர் பேரவை சர்வதேச பசுபாதுகாப்பு கழகத்தின் மூலம் மார்கழிமாதம் சர்வதேச பசுபாதுகாப்பு மாதமாக 1989 ஆம் ஆண்டு முதல் பிரகடனம் செய்துள்ளது.

இதற்கு சர்வசமயிகளும் ஆதரவு வழங்குதல் விவசாய விருத்திக்கும், மக்களது நல்வாழ்விற்கும் வழிகாட்டும்.

'பசுவை வளர்ப்போம் - பண்பாட்டை வளமாக்குவோம்'


**வே.கெ. தனபாலன்** ஆசிரியர்
இணைப்பாளர்
சர்வதேச பசுபாதுகாப்புக் கழகம்,
வவுனியா.

## காந்தீய வாதி நீர்வேலி வேலாயுதபிள்ளை

இப்பெரியார் சாதாரணமாக நாலுமுழ வேட்டியும், தோளில் ஒரு சால்வையும் அணிந்திருப்பார். முன்தலை களைந்து பின்பக்கமாக வாரி முடிந்த குடுமியையுடையவர், விபூதி பூசிய நெற்றியர். எப்பொழுதும் காந்தி சிந்தனையுடனே அவர் நடத்திய சேவா சங்கத்திற்கு சந்தாதாரரைச் சேர்த்து வந்தார். சந்தாவும் ஒரு ரூபாயாக இருக்க வேண்டும். தமிழ் நாட்டிலிருந்து வரும் சுதேச மித்திரன் முதலாகிய பத்திரிகைகளைக் கையில் வைத்திருந்தார். சொந்த முயற்சியால், கமத்தினாலான வருவாயைக் கொண்டு காந்தி பிரசுரங்களை வெளியிடுவார். கடைசியாக, இவர் கிளிநொச்சியில் குடியேற்றம் நடந்தபோது 10ஆம் வாய்க்காலில் காந்தீய நிலைய மொன்றை நடாத்தினார்.

இவரின் காந்தீயம் பற்றி, தென்னிலங்கையிலுள்ள காந்தீய சங்கத்தை நடாத்தி வந்த பெரியார் திரு. ஆரியரத்தினா என்பவர், இவரை நன்கு பாராட்டி வந்தார். ஒருமுறை தென்னிலங்கையில் காந்தீய மகாநாடு நடந்த போது, திரு வேலாயுதபிள்ளை, ஏதோ போக்குவரவு வசதியின்மையால் வரவில்லை என்பதை அறிந்த திரு. ஆரியரத்தினா அன்றைய மகாநாட்டில் திரு. வேலாயுதபிள்ளையை உடன் வருவிப்பதற்காக ஒரு விசேட விமானம் ஒன்றை அனுப்பி வரச்செய்தார். இது அக்கால பெருமக்களின் சிறப்பென்பதை இன்று நாம் அறிய வேண்டுமல்லவா.

**முதுபெரும் புலவர் வை. க. சிற்றம்பலம்**
ஓய்வுற்ற ஆசிரியர்.

## 61 ஆவது சிரார்த்ததினம்

**மன்னார்**

ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம், உண்ணாநோன்பு போன்ற அஹிம்சை வழிகளூடாக விடுதலைத்தீயை ஏற்படுத்தியவர் மகாத்மாகாந்தி. இவ்வாறு அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் நடைபெற்ற அடிகளாரின் 61 ஆவது சிரார்த்த தினக்கூட்டத்தில் உரையாற்றும்போது 'காந்தீயம்' பத்திரிகை ஆசிரியர் ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்தார். இந்நிகழ்வு 30.01.2009 மன்னார் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லத்தில் நடைபெற்றது. அன்றைய தினம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர், மாலையில் தேசபந்து அரசக்கோன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றினார். சுடரேற்றல், மலர்மாலை அணிவித்தல், அக வணக்கம், மலரஞ்சலி என்பவற்றைத் தொடர்ந்து மாணவர்கள் "ரகுபதி ராகவ...." பஜனையில் ஈடுபட்டனர். தொடர்ந்து ஆசிரியர் உரையாற்றுகையில், காந்தியிடம் இருந்த விலைமதிப்பற்ற சொத்து அஹிம்சையாகும். அதில் அவருக்கு அதீத நம்பிக்கை இருந்தது. யுத்தம் செய்யாமல் இரத்தம் சிந்தாமல் 40 கோடி மக்கள் இதன்மூலமாக சுதந்திரம் பெற்றனர். ஏழை, எளிய மக்களின் தோழனாக வாழ்ந்த காந்தி இன, மத, மொழி, சாதி வேறுபாடு காட்டாது விடுதலைத்தீயை மூட்டினார். சமூகபாதுகாப்பு,மதநல்லிணக்கம், கருத்துச் சுதந்திரம் என்பன அவசியமானவையாகும். இன்று காந்தி கண்ட கனவு அமெரிக்காவில் நிறைவேறியுள்ளது. கறுப்பு இனத்தவர் என்று விழிக்கப்படும் பராக் ஒபாமா 44 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)









மதுரை சர்வோதய இலக்கிய பண்ணையின் தலைவர் மு.மாரியப்பன் அவர்களின் காந்திசேவா சங்கத்திற்கான அன்பளிப்பு நூல்கள்

## இறைவன் ஒருவனே!

இராம ஜெயபாலன்

அகிம்சையும் கிம்சையும்
இறைவனின் இருவிழிகள்
இதையழகாய் விளக்கிடும்
பகவத்கீதை - படைப்பின்
பரிணாமமும் உணர்த்திடும்
சான்றுகளுடன் அனைத்திலும்

புத்தரும் காந்தியும் யேசுவும்
வாழ்ந்தே காட்டினர் அகிம்சையில்
நபிகளும் அகிம்சையில் விருப்புக்
கொண்டே மானிட மேன்மைக்காய்
கிம்சையை வெல்ல கிம்சையை
கையிலெடுத்தாலும் அவர்
கிம்சையில் விருப்புக் கொண்டவர்
அல்ல என்பதைக் காட்டிடும்
அவர் செய்கை அடிமைகளைமீட்க
தன்பணத்தை கொடுத்தே வாங்கி
விடுதலை தந்தார் - பாழாய்ப்போன
பல பழமைகள் வந்து ஒட்டிக்
கொண்டாலும் அவர் என்றும்
புதுமைகள் விரும்பும் மானிட
நேய மகத்துவ இறைதூதுவர்
என்றிட அது மிகையில்லை.

இறைவனின் போதனைகள்
பேதமைதருவதற்கல்ல மாறாக
பேதமையில் பகைமைகள் அல்ல
ஒருமையைத் தருவதற்கே
இறைவன் ஒருவனே யென்ற
பரந்த உண்மையை உணர்வோம்.



நிகழ்வு : 'காந்தீயம்' பத்திரிகை அறிமுகமும் வாசகர் வட்டம் அமைத்தலும்
இடம் : லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கையம்மன் இல்லம், மன்னார்.
காலம் : 2008.06.22

S. நாகரத்தினம் (PHI), M. ஷாந்தன் சத்தியகீர்த்தி, இல்லப்பொறுப்பாளர் செந்தூரன், வே.பொ. மாணிக்கவாசகர் ஆகியோருடன் இல்லச் சிறார்கள்.

அடிமைவாழ் வகன்றின் நாட்டார் விடுதலை யார்ந்து, செல்வம்,
குடிமையி லுயர்வு, கல்வி, ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும் படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்!
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்! புவிக்குளே முதன்மை யுற்றாய்!

- பாரதியார் -

## அன்பர் தபால்

### 'காந்தீயம் உன்னுடன்'

காந்தியை வெளிப்படுத்தும் காந்தீயமே நீ பல்லாண்டு காலம் வாழ்க வளமுடன். காந்தீயமே உனது ஒளிக்கதிர் உலகமெங்கும் வீசி பெயர்பெற எனது வாழ்த்துக்கள். இலங்கை மட்டுமல்ல வெளி உலக உறவு கிடைக்க நீ செய்யும் இந்தப் பணிக்கு விலை மதிப்பே இல்லை.

M.H.M. ஆதில்
ஒலுவில் - 04

### 'காந்தீயம் எனது கண்'

எத்தனை காலம் சென்றாலும் உங்கள் காந்தீயத்திற்காக காத்திருப்பேன். காந்தீயம் எனக்கு கண் போன்றது நற்பணிகள் புரியும் சந்தர்ப்பம் கிட்ட எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

சி. ஜெயகணேஷன்
ஆசிரியர்,
சாவகச்சேரி.

### புலவருக்காக வேண்டுவோம்

கடந்த வெளியீட்டில் புலவர் வை.க.சிற்றம்பலம் அவர்களின் பேட்டி வெளிவந்தது. வாசித்து மகிழ்ந்தேன். எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள் நல்ல சுகதேகியாக 95 ஆண்டுகள் வாழ்வதே கிடைத்த பேறாகும். இப்படி யார் தான் வாழ்வார்கள் என்று கூறுவதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இறைவன் இவரை வாழ வைத்துள்ளார். புலவர் ஐயா மேலும் மேலும் நன்றாக வாழ இறைவன் அருள் வேண்டுவோம். 'காந்தீயம்' தவறாது வரிவரியாக வாசித்து பயன் பெற்று வருகின்றேன்.

க. வாமதேவன்
பண்ணாகம்,
சுழிபுரம்.

### காந்தி ஐயா பற்றி தொடர்ந்து எழுதுங்கள்

காந்தி ஐயாவின் நேர்காணல் பிரசுரமாகி இருந்தமை கண்டு பெருமகிழ்வடைந்தேன். இக்காலத்தில் அத்தகையதொரு காந்தியவாதியைக் காண்பது மிகமிக அரிது. அவருடைய நிலையில் அவருடைய வயதில் அவர் செய்யும் பணி அளவிடற்கரியது. அவர்களைப் பற்றித் தொடர்ச்சியாக காந்தீயத்தில் எழுதுங்கள். அதுவே எமது வளர்ச்சிக்கு வழிகாட்டுவதோடு எடுத்துக் காட்டாகவும் இருக்கும்.

ஆ. வடிவேலு
பருத்தித்துறை

### நன்றிகள்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் பணிகளுக்கென கொழும்பைச் சேர்ந்த டாக்டர் சிவசிவ (சண்முகநாதன்) அவர்களும், கந்தர்மடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. ச. புவனேஸ்வரன் அவர்களும் ஒரு தொகைப்பணத்தை அன்பளிப்புச் செய்துள்ளனர். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். இந்நிதியை எமது சங்கம் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்காக செலவு செய்துள்ளது.

வடமாகாண சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திரு. இராசநாயகம் அவர்கள் காந்தீயம் பத்திரிகையின் வளர்ச்சிக்கென ஒரு தொகைப் பணத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அவர்களுக்கும் சங்கம் தனது நன்றியைத் தெரிவிக்கின்றது

# என்னருமைத் தமிழ் மக்களே!

முதலாம் மகாயுத்தம் நடந்த போதும் நமது மக்கள் கமபுல வருவாயைக் கொண்டு பட்டினி கிடக்கவில்லை. போதிய அளவு, தினை, குரக்கன், கிழங்குவகை, வாழைப்பழம், வாழைக்காய் தமது கையில் வைத்திருந்தனர், அன்று எல்லா மக்களும் உயர்வு தாழ்வின்றி ஒன்றாக பகிர்ந்து உண்டுடுத்து வாழ்ந்தனராம்.

இரண்டாம் மகா யுத்தத்திலும் நம்மக்கள் உணவுக்குப் பஞ்சப்படவில்லை. அரிசிச் சோற்றை அன்று உண்டு பழகிய எமக்கு, அரசின் ஒப்புதலுடன் தென்னிந்தியாவிலிருந்து அரிசி பருத்தித்துறைக்குக் கிடைக்கவே பட்டினி சிறிதுமில்லை. அப்பொழுதும் நாம், சிறுதானியங்களை கிழங்குவகைகளை, கனி வகைகளைக் கைவிடவில்லை.

பனை, தென்னை, கமுகு மரங்களின் பயனும் தாராளமாகக் கிடைக்கப் பெற்றது. அதுமட்டுமா சுமார் எழுபத்தைந்து வீதமானோர், பால்மாடு, ஆடுகளை வளர்த்து அவற்றின் பயனை அனுபவித்தனர். சுமார் தொண்ணூறு வீதமானோர் சுகதேகிகளாகவே வாழ்ந்தனர். ஆயிரத்துக்கு ஐந்து பேர், இல்லை, இன்னும் குறைவானோரே சலரோகத்தால் பீடிக்கப்பட்டிருந்தனர் எனலாம். அந்தக் காலத்தில் கைவைத்தியம், சித்த வைத்தியம் நன்றாகத் துணை செய்தன. அக்காலத்தில் ஒழுக்கமும் கடவுள் பிரார்த்தனையும் ஒவ்வொருவரிடமும் அமைந்திருந்தன.

அக்காலத்தில் மாட்டெரு, ஆட்டெரு தாவர சருகு முதலிய குப்பைகள் கமத்துக்கு உபயோகப்பட்டன அதனாலே உண்டாகிய மிளகாய்ச் செடியில் குருமன் நோய் அறவேயில்லை.

இன்று எல்லாம் கைவிட்டோம். மக்கள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். வருவாயில்லை. அரச உத்தியோகத்தர், வியாபாரிமார் ஒருவாறு சமாளிக்கிறார்கள். அரசு அனுப்பும் அரிசி, மா முதலியவற்றை வாங்க அவர்களால் முடியும். ஆனால் தொழிலாளர் பாடோ அதோகதி.

ஆகவே எல்லோருஞ் சேர்ந்து பனை, தென்னை பயன்களை முழுமையாகப் பயன்படுத்தினால் வெற்றி நிச்சயம். கறிமுருங்கையை நட்டுப் பயன்பெறலாம். பனை,மா, பலா, தென்னை இவற்றை நட்டும் வளர்க்கலாம்.

காய், பிஞ்சு, செடிகளை நட்டும், பீர்க்கு, பாகல், புடோல் வகைகளை படரச்செய்தும், மணித்தக்காளி, தூதுவளை, கொவ்வை முதலிய இலை வகைகளையும் பயன்படுத்தலாம்.

வேப்பநெய், இலுப்பை நெய்களையும் நாம் ஆக்கலாம். உள்ளவர்கள் இல்லாதவர்களுக்கு கொடுத்து வாழ வேண்டும்.கல்வியே, அதாவது ஆங்கிலத்தை, மறவாமல் கற்றல் வேண்டும். அரசாங்கம் தரும் உதவிகளை பயன்படுத்த வேண்டும். காந்தீயஞ் செழிக்க பிரார்த்தனையோடு வாழ வேண்டும்.

**முதுபெரும் புலவர்**
**கலாபூஷணம் வை.க. சிற்றம்பலம்.**

## உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம்

உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தின் இலங்கைக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் 2009.08.05 ஆம் திகதி கொழும்புத்தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. திரு. அந்தனிஜீவா வரவேற்புரை நிகழ்த்திய பின், பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் சிற்றிதழ்களின் சிறப்பான பணிகளைக் குறிப்பிட்டு உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தின் கிளையை இலங்கையில் நிறுவுவது வரவேற்கத்தக்கதெனக் கூறினார்.

சிற்றிதழ்கள் வெளியிடுவதிலுள்ள சிரமங்களை வாயால் கூறி உணர வைக்கமுடியாதென்றும் அனுபவத்தின் மூலமே உணர முடியுமெனச் சொன்னார். அடுத்து, சிற்றிதழ்களை வெளியிடுபவர்கள், தங்களை அறிமுகஞ் செய்தனர். இலங்கையில் வெளிவரும் தமிழ்ச் சிற்றிதழ்களை சேகரித்து பாதுகாத்து வைக்கும் பணியை கொழும்புத் தமிழ்ச்சங்கம் மேற்கொள்ள வேண்டுமெனப் பலரும் கோரினார்கள்.

திருமதி. பத்மா சோமகாந்தன் அவர்களின் தலைமையில் நிருவாகக் குழு தெரிவுசெய்யப்பட்டது.

## மரங்களைப் பேணி மண் வளம் காப்போம்

சந்நியாசி ஒருவர் எந்த நேரமும் நடந்தாலும், இருந்தாலும் கிடந்தாலும், உண்டாலும், எழுந்தாலும் "சிவசிதம்பரம் சிவசிதம்பரம்" என்று உரக்கச் சொல்லி வந்தாராம். அங்ஙனமே பைத்தியகாரன் ஒருவன் எந்தநேரமும் "கச்சேரி பத்திரம், கச்சேரி பத்திரம்" என்று கத்திக் கொண்டு திரிந்தானாம். இந்த வகையில் மரம் நாட்டும் பணியில் பைத்தியங்கொண்ட மில்க்வைற் தொழிலதிபர் அர்ப்பணிப்போடு ஈடுபட்டார்.

வரண்ட பிரதேசமெங்கும் வளமும் வாழ்வும் வழங்கப் பரந்த அளவில் மரம்நாட்டும் பணியைத் தனியொரு மனிதனாக ஆரம்பித்த மில்க்வைற் தொழிலதிபர், மக்கள் யுகத்தின் மாண்பினை அனுசரித்து அவரவர் பிறந்த நாள்களில் எம்மரமாயினும் ஒரு மரம் நடுக என உருக்கமாக வேண்டுகோள் விடுத்துப் பெருமளவில் பல்வேறு மரக்கன்றுகளையும் விதைகளையும் வழங்கும் வழக்கம் எல்லோரும் அறிந்ததே.

முன்னர் மகா இலுப்பலாமா, கிளிநொச்சி, திருநெல்வேலி முதலிய பண்ணைகளிலிருந்து மரக்கன்றுகளைப் பெருமளவில் விலைக்குப் பெற்று எல்லோருக்கும் இலவசமாக வீட்டுக்கு வீடு விநியோகஞ் செய்தவர். அதில் பொச்சம் அடங்காமல், தமது தொழிலகத்தின் அண்மையில் பெரிய நிலப்பரப்பை விலைக்கு வாங்கிச் செம்மண்ணும் பசுந்தாளும் எருவும் இட்டுப் பக்குவப்படுத்திப் பலவகை நாற்றுமேடைகள் தயாரித்து எத்தனைபேருக்கும் மரக்கன்றுகள் செடிகள் வழங்கிவந்தார்.

**ஆதாரம் : மில்க்வைற் செய்தி.**

## உலக தாவர உணவுத்தினம்

உலக தாவர உணவுத்தினமாக வெள்ளிக்கிழமை தினத்தை முதன்மைப்படுத்துக! சர்வசமயிகளும் தாவர உணவின் சிறப்புகளை முதன்மையாக்குதல் சிறப்புடையதாகும்.

பௌத்தசமயிகள் போயாதினத்தை இலங்கையில் பொதுவிடுமுறையாகவும் தாவர உணவு தினமாகவும் பிரகடனம் செய்து செயல்படுத்துகின்றனர்.

கிறிஸ்தவ சமயிகள் தவக்காலத்தை தாவர உணவுத் தினமாகவும் பெரிய வெள்ளி நாள் தினம் உபவாச தினமாகவும் பின்பற்றுகின்றனர்.

இந்து சமயிகள் வெள்ளி நாள் விசேட பிரார்த்தனையுடன் தாவர உணவு தினமாக வாராந்தம் விசேடமாக முதன்மை படுத்தியுள்ளனர்.

எனவே சர்வசமயிகளும் அதிக உணவு உற்பத்திக்கு ஊக்கமளிப்பதுடன் சிறந்த போசாக்கு நிலைக்கு வழிகாட்டுக.

**இந்து அரச ஊழியர்கள் இணையம்.**

## நூல்கள் அன்பளிப்பு

☞ கொழும்பு, தெகிவளை, இரத்னாகர பிளேசைச் சேர்ந்த திருமதி. இந்துமதி ஜெயராசா, காந்தி நூலகத்திற்கு பகவத்கீதை (விசேடபதிப்பு) அன்பளிப்புச் செய்துள்ளார்.

☞ சர்வோதய இலக்கியப் பண்ணையின் தலைவரும் "சர்வோதயம் மலர்கிறது" இதழின் பதிப்பாசிரியருமான முனைவர் மு. மாரியப்பன் அவர்கள் எமது நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இவர்களுக்கு அகில இலங்கை காந்திசேவா சங்கம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

## ஆசியுரை

வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலய ஆசிரியர் திரு. தி. உதயசூரியன் அவர்கள் எழுதி வெளியிட்ட பொங்கல் என்னும் நூலைப் பலமுறை படித்தேன். பலருக்கும் படிக்கக் கொடுத்தேன்.

சிறு பிள்ளைகள் விரும்பிப்படிக்கக்கூடிய ஆக்கங்கள் மிகக்குறைவாகக் காணப்படும் இக்காலத்தில் இத்தகைய நூல்கள் மிகவும் பயன்படும் சிறு பிள்ளைகள் கதைகளிலும் பாட்டுகளிலும் விருப்பம் உடையவர்கள். அவர்களுக்கேற்ற நூல்களை வெளியிடுவது மிகவும் பொருத்தமாகும். பெரிய சேவையுமாகும்.

வாசிப்புப் பழக்கம் குறைந்து கொண்டு போகிறது. பரீட்சையை இலக்காக வைத்துப் பிள்ளைகள் படிக்கிறார்கள். பரீட்சையில் சித்தியடைவது மட்டும் போதாது. அறி நூல்கள், நீதி நூல்கள், சமய நூல்கள் பெரியாரின் வாழ்க்கை வரலாறுகளையும் பிள்ளைகள் படிக்க வேண்டும். அவை தான் சீரான வாழ்க்கையை நடத்த உதவும்.

மாபெருந் தொண்டர் தொழில் அதிபர் மில்க்வைற் கனகராசா ஐயா அவர்கள் அமரர் ஆகும் வரையும் சமய சமூக நீதி நூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் ஆயிரக்கணக்கில் வெளியிட்டு இலவசமாகக் கிராமங்கள் தோறும் அறிவைப் பரப்பி வந்தார். வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகிறான் என்னும் துண்டுப்பிரசுரத்தை ஆயிரக்கணக்கில் பரப்பினார்.

நன்கொடைகளைப் பெற்று குறைவான விலையில் புத்தகங்களை வெளியிட்டால் ஆயிரக்கணக்கான நூல்களை மக்களிடம் சேர்ப்பிக்கலாம்.

ஆசிரியர் அவர்கள் மேலும் பல நூல்களை வெளியிட்டு பிள்ளைகளின் அறிவு முன்னேற்றத்திற்கு உதவ இறைவன் அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.**

**ஆனந்தம்**

முத்துக்குமாரசுவாமி கோவிலடி,
திருகோணமலை,
21.01.2009

**பொ. கந்தையா**
காந்தி ஆசிரியர்.

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் பணிகளுக்கு நிதி உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் சங்கத்தின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி உதவுக.

**சேமிப்பு கணக்கு இலக்கம்**

**0005 2120245384**

**இலங்கை வங்கி,**
**ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## மனித குல வளர்ப்புத் தாய்

இறைவனைச் சத்பொருளாக இறைஞ்சி சந்ததம் மண்ணில்
ஈசனுக்காக எதனையும் இழக்கச் சித்தத்தை இறுக்கி
மறையோனுக் குரிய சத்தியநெறியில் மெய்யனைக் காணென்று
மிழற்றும் காந்தீயக் கருத்துக்கள் மனிதகுல கைத்தாய்

அமையத்தின் அபிதானத்தால் ஆற்றும் அக்கிரமத்தை பொழித்து
அந்தோ அறிவுக்கொவ்வா அனுட்டானத்தை அகற்றிப் புவியின்
அமைதிக் கரணாகும் இன்பவூற்றாம் அன்பே தன்மத மென்று
ஆர்க்கும் காந்தீயக் கருத்துக்கள் மனிதகுல கைத்தாய்

தான்சார் சமூகம் தனதுரிமை தரத்தவறின் புரட்சியைத்
தோற்று வித்துப் புதியபாதை தேர்ந்ததனைக் கையாளின்
வான்களிகூர இம்மாற்றம் தன்பிறர் நலனோம்ப உதவுமென்று
விளம்பும் காந்தீயக் கருத்துக்கள் மனிதகுல கைத்தாய்.

பிரமஞானம் பொங்கிப் பிரவாகித்துப் பாய்ந்தோடி மனதில்
புன்மைக் குணத்தைப் பாற்றிவீழ்த்தப் பக்கத்துணை யாகும்
பிரயாசையின் வழிவகுத்தலில் பிறப்பதே தெய்வீக மென்று
புகட்டும் காந்தீயக் கருத்துக்கள் மனிதகுல கைத்தாய்

மனத்தாலும் வாக்காலும் மற்றும் மாயக்குரம் பையாலும்
மன்னுயிர் தன்னுயிர்க்கும் மாண்பே கருத்துகால நுட்பத்திலும்
மனச் சஞ்சலம் மூளாமல் பார்த்துக் கொள்வதே அகிம்சையென்று
மொழியும் காந்தீயக் கருத்துக்கள் மனிதகுல கைத்தாய்

தூய கருத்து பேச்சு நடத்தையைத் தூண்களாக்கி யவற்றில்
பிரமசரி யத்தை நிறுவி ஆன்மார்த்த பூசையின் பலத்தால்
தீய எண்ணியரையும் திருத்திச் செவ்வழிப் படுத்த முடியுமென்று
தூவுரைசெய் காந்தீயக் கருத்துக்கள் மனிதகுல கைத்தாய்

அனுமதியின்றி அயலான் பொருளை அடக்குதல் திருட்டேயாம்
அமைவன்அளவின்றி அமைத்திட்டானே எண்ணலும் திருட்டேநின்
மனுவுக் கதிகமாய்ப் பொருளைப் பாவித்தலும் திருட்டேயென்று
மேவுகின்ற காந்தீயக் கருத்துக்கள் மனிதகுல கைத்தாய்.

**- மணிமன்றன் -**
யாழ்ப்பாணம்.

(4ம் பக்கத் தொடர்ச்சி....)

வன்முறைமூலம் ஒரு பொழுதும் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வைக் காணமுடியாது என்பதே வரலாறு சொல்லும் பாடமாகும். மகாகவி பாரதியார் கூறியதுபோல் காந்தியடிகள் முடிவிலாக் கீர்த்தி பெற்று புவிக்குள்ளே முதன்மையுற்றுள்ளார். என்று கூறினார். மாணவர்களின் கவிதை, பேச்சு என்பன இடம்பெற்றன. இல்லச் சிறுவர்கள் அனைவருக்கும் அகில இலங்கை காந்திசேவா சங்கத்தினால் கல்வி உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

**யாழ்ப்பாணம் :**

காந்தி சிரார்த்ததினம் வழமை போன்று யாழ்ப்பாணத்தில் சிறப்புற இடம்பெற்றது. ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அடிகளாரின் உருவச்சிலைக்கு அகில இலங்கை காந்தி சேவா சங்க உறுப்பினர்கள் மலர் மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செய்தனர். உரைகளும் இடம்பெற்றன. சிறப்பு நிகழ்வு நவாலி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வை கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலய அதிபர். திரு.செல்வக்குமாரன் ஏற்பாடு செய்திருந்தார். சங்கத்தின் உபதலைவர் ஆ.வடிவேலு, செயலாளர். இராசரத்தினம், ஓய்வுபெற்ற அதிபர் ஆ.சபாரத்தினம் ஆகியோர் விருந்தினராகக் கலந்து சிறப்பித்தனர். காந்தி ஐயா தனது மனைவியின் நினைவாக வெளியிட்ட "மகாத்மா காந்தி அடிகளின் அருள்மொழிகள்" என்ற சிறுவெளியீட்டை தனது செலவில் ஆ.வடிவேலு அவர்கள் மீண்டும் பதிப்பித்து அன்றைய தினம் மாணவர்களுக்கு வழங்கினார். மேலும் பிரார்த்தனைப் படிவமும் பதிப்பித்து விநியோகிக்கப்பட்டது. பிரார்த்தனைப் படிவம் அச்சுப் பதிவுச் செலவை பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் வழங்கியிருந்தார்.

# மகாத்மா காந்தியும் பருத்தித்துறை நகரும்

அகிம்சை என்னும் சொல்லிற்கு உதாரண புருஷராக வாழ்ந்து காட்டியவர் மகாத்மா காந்தி. அந்நிய நாட்டவருக்கு அடிமைப்பட்டிருந்த பாரததேசத்திற்கு விடுதலை வேண்டிக்கொடுக்க அகிம்சை என்னும் வழியைத் தேர்ந்தெடுத்து உபயோகித்தவர் மகாத்மாகாந்தி. இன்று உலகெங்கும் யுத்தமும் அழிவும் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற பொழுது மகாத்மா காந்தியின் தேவை மிகவும் உணரப்படுகின்றது. இத்தகைய மகானுக்கு பருத்தித்துறை நகர சபையார் 1953 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்திலேயே பருத்தித்துறை நகர மத்தியில் சிலை நிறுவி பருத்தித்துறை மக்கள் அகிம்சை உடையவர்களாக வாழ வேண்டுமென்று வழிகாட்டினர். நமது நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கொடிய யுத்தத்தினால் பருத்தித்துறை நகரமும் நரத்தில் அமைந்திருந்த மகாத்மாகாந்தியின் சிலையும் 1987ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அழிக்கப்பட்டுவிட்டன. மகாத்மா காந்தி மீது பற்று வைத்திருக்கின்ற பருத்தித்துறை நகரசபையார் 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திரும்பவும் மகாத்மாகாந்தியின் சிலையை பருத்தித்துறை சந்தைவளாகம் அமையவுள்ள இடத்தில் நிறுவியுள்ளனர். அச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து கௌரவிக்கும் பணியை அகில இலங்கைக் காந்திசேவா சங்கத்தினர் காலத்திற்குக் காலம் மேற்கொண்டு வருகின்றனர்.

மகாத்மா காந்திக்குச் சிலை அமைத்துக் கௌரவிக்கும் பருத்தித்துறை நகரமக்கள் மகாத்மாகாந்தியின் போதனைகளைப் பின்பற்றி அகிம்சை உடையவர்களாக வாழ மகாத்மாகாந்தி அடிகளின் தூய ஆன்மாவைப்பிரார்த்திப்போமாக.

**அ.அ.நடராசா**
செயலாளர்,
நகராட்சிமன்றம்,
பருத்தித்துறை.

சர்வோதய நற்சமுதாயத்தினை நிர்மாணம் செய
நித்தமும் உழைப்போம்.

## உலக சமாதானம்



சிறைகள் பல சென்று
தியாகம் பல செய்து
அன்பு எனும் ஆயுதத்தால்
வெற்றி பெற்றவர் எம் காந்தி

- U. கஜன்
மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி.

## செய்திச்சரம்

செவிப்புலனற்றோர்களுக்கான "உழைப்போம் வாழ்வோம்" கருத்தரங்கு பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத்தினால் புலோலி பசுபதீஸ்வரர் ஆலய கலா மண்டபத்தில் 2008 ஏப்ரல் 27ஆம திகதி நடத்தப்பட்டது. யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத் தலைவர் கா. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சுவாமி சித்ரூபானந்தா ஆசியுரை வழங்கினார்.

## அகிம்சை என்றால் என்ன?
## விடை தருகிறார் காந்தியடிகள்

- அகிம்சை என்பது அன்பின் வலிமை. அகிம்சாவாதி அஞ்சுவது கடவுளுக்கு மட்டுமே. அகிம்சையின் அகராதியில் தோல்விக்கு இடமில்லை. அகிம்சையை மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடைப்பிடிக்க வேண்டும்.
- சத்தியமும் அகிம்சையும் குறிப்பிட்ட ஒருவருக்காகவோ ஒரு கூட்டத்தாருக்காகவோ உண்டானவை அன்று. அங்ஙனமே தன்னடக்கமும் ஒரு சிலருக்காகவன்றி, மனிதசமுதாயம் முழுவதுக்கும் அவசியமாகும்.
- அகிம்சா யுத்தம் எப்போதும் ஓர் உடன்பாட்டினாலே தான் முடியும். அதனால் எதிரிக்கு அவமான நிலையும் உண்டாகாது.
- அகிம்சை றேடியம் போன்று நுண்ணிய சூக்குமமாகச் செயற்பட்டுச் சமுதாயம் முழுவதையும் சீர்ப்படுத்துகிறது.
- அகிம்சை மன்னிப்பின் எல்லைக்கோடு. அத்தோடு பணிவின் எல்லைக்கோடுமாம்.
- அகிம்சை முறை நம்மீது எதிரிகள் கொண்டுள்ள விரோதமனப்பான்மையைச் சாந்தப்படுத்தும், அன்றிப் பகைமையை வளரவிடாது.

**உண்மை பேசி உத்தமனாக வாழ்**
- மகாத்மா காந்தி -

இப்பத்திரிகை 171, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களால் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக வவுனியா 1ஆம் குறுக்குத்தெரு, இலக்கம் 61-B, இல் அமைந்துள்ள வாணி கணினிப் பதிப்பகத்தில் 2009ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இதழாசிரியர்: எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி